# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
# குழித்துறை நகராட்சி

**<u>குழித்துறை நகர் மன்றத்தின் 18–08–2017 ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரணரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள்</u>**

<u>பொருள் எண். 1</u>

சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2017–க்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் 5 நகல்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது. அதற்கான செலவினப்பட்டியல் ரூ.1647/– பட்டியல் தொகை பெறப்பெற்றுள்ளது. அத்தொகையினை “Hameedheen Printers” என்ற நிறுவனத்திற்கு வங்கி வரைவோலை மூலம் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.
ந,.க.எண்.1016/2016/அ1.

**நகர்மன்றத் தீர்மான எண்.2943**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரியும் திருமதி.M.C. ஷீலா இவாஞ்சலின் என்பவரால் தனது கல்வித்தகுதிக்கேற்றவாறு நகரமைப்பு ஆய்வாளர் பணி வழங்க கோரி சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.A.(MD) No.163/2015–ல் திருமதி.M.C. ஷீலா இவாஞ்சலின், வருவாய் உதவியாளருக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றதை தொடர்ந்து கல்வித்தகுதிக்கேற்ற பணி வழங்கப்படாததால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (Contempt Petition No.1029/2017) சம்பந்தப்பட்டவரால் தொடரப்பட்டு, நிலுவையில் உள்ள நிலையில் மேற்படி தீர்ப்பினை எதிர்த்து அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு (SLP (Civil) 018330/2017) வழக்கு தொடரப்பட்டது. மேற்படி மேல்முறையீடு வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.1,35,000/–ஐ வழக்கறிஞர் திரு.S. நந்தகுமார் உச்சநீதிமன்ற வழக்கறிஞர் கோரியதின்படி மேற்படி கட்டணம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2944**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் குடிநீர் வினியோக குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள், Sulice Value கள், நகராட்சி பகுதிகளிலுள்ள பொதுக்குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் தங்கு தடையின்றி வினியோகம் செய்வதற்கு, குடிநீர் அவசியம் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி 2017–2018–ம்

ஆண்டிற்கு பராமரிப்பு செய்திட ரூ.6,00,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, குடிநீர் நிதியில் பணிமேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2945**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்ததாரராக பணி செய்யும் திரு.எஸ். பாபு என்பவர் செய்து முடிக்கப்பட்ட பணிகளில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகள் 2011 முதல் 2014 வரையிலானது ரூ.1,34,473/–ஐ அன்னாருக்கு திருப்பி வழங்கிட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2946,**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீரேற்றிகள் மூலம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நிரேற்றம் செய்யப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் பவர்பம்ப் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவைகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து, குடிநீர் வினியோகம் பாதிப்படையாத வகையில் தலைமை நீரேற்று நிலைய நீரேற்றிகள் மற்றும் 21 வார்டுகளிலுள்ள பவர்பம்ப் பழுதுகள் ஒராண்டிற்கு (2017–2018) சரி செய்யும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.5,50,000/–ற்கு தயார் செய்யப்பட்டு குடிநீர் நிதியில் பணி செய்திட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2947,**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 6</u>

அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் நகராட்சிப் பகுதிக்குள் உள்ள அனைத்து வார்டுகளிலும் வீடு தேவையானவர்கன் பட்டியல் தயாரிக்க 10 நபர்கள் கணக்கெடுப்புப் பணிக்கு தெரிவு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற 24–08–2016–ம் தேதிய ஆய்வுக் கூட்ட நடவடிக்கைகள் (File No.15350/2016/IHSDP-2, dated 24-08-2016)படி கணக்கெடுப்பாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.10,000/– வழங்கவும், பின் தொகையினை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக தமிழ்நாடு குடிநீர் மாற்றுவாரீயம் மூலம் பெற்றுக் கொள்ளவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 50% தொகையினை 2–5–2017 தேதிய தீர்மானம் எண்.2880–ன்படி வாயிலாக அனுமதி பெற்று ரூ.5000/– வீதம் 10 நபர்களுக்கும் வழங்கப்பட்டது. மீதமுள்ள தொகையினையும் வழங்கி விட்டு தான் குடிசை மாற்று வாரீயம் மூலம் முழுத்தொகையையும் திரும்பப் பெற முடியும். எனவே மீதி 50% தொகையினை கணக்கெடுப்பு பணியாளர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2948,**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 7

குழித்துறை நகராட்சியில் Centralized Web based Softward பணி நடைமுறையில் உள்ளதால் கணினி அறையிலுள்ள Internet connection–க்கான D-Link modem சரிவர இயங்காமல் அடிக்கடி இணைப்பு துண்டிப்பாவதால் புதிதாக Link modem வாங்குவதற்கு அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| 1) | Micronet System,<br>Computer Sales and Service,<br>Thuckalay. | Rs.1900/- |
| 2) | Hitech Systems,<br>Computer Sales and Service,<br>Thuckalay. | Rs.2500/- |
| 3) | Microstuf Computers,<br>Winson Plaza,<br>Karungal. | Rs.2300/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் Micronet System கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்க மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2949**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வெட்டுவெந்நி பூங்கா அருகிலுள்ள குற்றுவிளை ரோட்டிற்கு தெருவிளக்கு இல்லாததால் இரவு நேரங்களில் பொதுமக்கள் செல்வதற்கு சிரமமாக உள்ளதால் அப்பகுதியில் புதிதாக தெருவிளக்கு அமைக்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2950**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 21 காட்டுவிளை சாலையிலும், மார்த்தாண்டம் வினோத் மருத்துவமனை அருகிலுள்ள தெருவிலும் தெருவிளக்குகள் இல்லாததால் இரவு நேரங்களில் பொதுமக்கள் செல்வதற்கு சிரமமாக உள்ளதால் அப்பகுதியில் புதிதாக குழல் விளக்குகள் அமைப்பதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2951**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 10

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வெட்டுக்காடு காவு அருகிலுள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு இல்லாத காரணத்தால் இரவு நேரங்களில் பாதசாரிகள் நடமாட இயலாத சூழ்நிலையிலுள்ளதால் மேற்படி மின்கம்பத்தில் புதிதாக மின்விளக்கு அமைப்பதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2952,**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திலுள்ள A மற்றும் B பிளாக் கடைகள் இருசக்கர வாகன காப்பகம் ஆகியவற்றின் மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கேட்டும் எவரும் குத்தகைக்கு எடுக்காமல் உள்ளதால் கீழ்கண்ட மின்இணைப்புகளுக்கு மின் கட்டணம் செலுத்தாமல் இருப்பதால் மின் இணைப்பு துண்டிக்கப்படும். மேற்படி மின் இணைப்புகளுக்கு துண்டிக்கப்படாமல் இருக்க தொகையினை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

1) கடை எண்.5A – ரூ. 42/–
2) கடை எண்.6A – ரூ. 42/–
3) கடை எண்.7A – ரூ. 42/–
4) கடை எண்.8A – ரூ. 42/–
5) கடை எண்.11B – ரூ. 77/–
6) கடை எண். 13B – ரூ. 92/–
7) இருசக்கர வாகனம் காப்பகம் – ரூ. 88/–

------
425
------

**நகர்மன்றத் தீர்மான எண்.2953,**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பி.பி. முனிசாமி வணிகவளாக கடை எண்.F8, F9, F10, F11 மற்றும் F12 ஆகிய 5 கடைகளை 31–8–2017–ல் கடைகளுக்கு உண்டான வாடகையினை செலுத்திவிட்டு தொடர்ந்து கடை நடத்த இயலாது என தெரிவித்து குத்தகைதாரர் திரு.ஜி. பிரகாஷ்குமார் மேற்படி கடைகளின் சாவியினை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வண்ணம் கடையினை மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2954**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.13

2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் படி கேளிக்கை வரி விலக்களிப்பது குறித்தோ அல்லது தள்ளுபடி செய்வது குறித்தோ தீர்மானம் நிறைவேற்றுவது.

## மன்றப் பொருள்

1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்கள் உள்ளிட்ட ஏனையை கேளிக்கைகள் மீது கேளிக்கை வரி விதித்து வசூலிக்கப்பட்டு வந்தன. இந்த சட்டம் நீக்கரவு செய்யப்பட்ட நிலையில், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரிச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 1.7.2017 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் திரைப்படங்கள் உள்ளிட்ட கேளிக்கைகள் மீது வரி விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து, தமிழ் திரைப்பட வர்த்தக சபை, தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சஙகம், தமிழ் திரைப்பட சம்மேளனம், தென்னிந்திய திரைப்பட சபை ஆகிய சஙகஙகள் கேளிக்கைகள் வரியினை ரத்து செய்யவும், திரைப்படத்திற்கான நுழைவுச் சீட்டினுடைய விலையினை உயர்த்தவும் மற்றும் சில கோரிக்கைகளை அரசுக்கு வைத்து உள்ளனர். இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி, எந்த ஒரு கேளிக்கை அல்லது கேளிக்கைகளின் வகைகள் மீது விதிக்கப்படும் கேளிக்கை வரியிலிருந்து உள்ளாட்சிமன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில், அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களிக்கலாம் அல்லது கேளிக்கைகள் மீது விதிக்கப்பட்ட வரியை தள்ளுபடி (Remission) செய்யலாம். இச்சஙகஙகளின் கோரிக்கைகளை அரசு பரிசீலிப்பதற்கு ஏதுவாக உள்ளாட்சி மன்றஙகளின் கருத்துகளைப் பெற்று அனுப்புமாறு அரசு கேட்டுக் கொண்டுள்ளதன் அடிப்படையில் (அரசு கடித எண்.14781 / தேர்தல் / 2017–1, நாள்: 1.8.2017) நகராட்சி நிர்வாக ஆணையர் அதனை மேலனுப்பி மன்றத்தின் கருத்துக்களையும், பரிந்துரைகளையும் அனுப்பி வைக்குமாறு கேட்டு கொண்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

## தீர்மானம்

**2017ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20 / 2017) , பிரிவு 11–ன் படி, அச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கேளிக்கை வரியினை செலுத்தும் கடப்பாட்டிலிருந்து, அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் வரிவிதிப்பதிலிருந்து விலக்களிப்பதற்கும் (EXEMPTION); மேலும் எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் அல்லது எந்த ஒரு உரிமையாளர் அல்லது உரிமையாளர்களின் வகையினர் அல்லது எந்த ஒரு நபர் அல்லது நபர்களின் வகையினர் செலுத்த வேண்டிய கேளிக்கை வரி முழுவதையுமோ அல்லது அதன் பகுதி எதனையுமோ முன்தேதியிட்டோ அல்லது பின் தேதியிட்டோ தள்ளுபடி (REMISSION) செய்வதற்கும் மன்றம் தீர்மானம் இயற்றி அரசின் பரிசீலனைக்கு அனுப்பலாம் என்ற சட்ட வகைமுறைகளின் அடிப்படையில் மேற்படி கோரிக்கைகள் குறித்து மன்றத்தினால் பரிசீலிக்கப்பட்டது.**

**அதன்படி, மாநகராட்சிகளின் / நகராட்சிகளின் / பேரூராட்சிகளின் நலன் கருதியும் மற்றும் அரசுக்குள்ள கடப்பாடுகளை செவ்வனே நிறைவேற்றும்பொருட்டு :-**

**(1) அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் கேளிக்கைவரி விதிப்பதிலிருந்து விலக்களிக்கவும்**

**(2) எந்த ஒரு கேளிக்கைகள் அல்லது கேளிக்கைகளின் வகைகள் அல்லது எந்த ஒரு உரிமையாளர் அல்லது உரிமையாளர்களின் வகையினர் அல்லது எந்த ஒரு நபர் அல்லது நபர்களின் வகையினர் பொறுத்தும் கேளிக்கை வரி முழுவதையும் அல்லது அதன் பகுதி எதனையும் முன்தேதியிட்டோ அல்லது பின்தேதியிட்டோ அரசு**

**பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு கேளிக்கை வரியை தள்ளுபடி செய்யவும்; மற்றும்**

**(3) மேலே சொல்லப்பட்ட கோரிக்கைகள் போன்று அரசு பொருத்தமெனக் கருதும் பிறவற்றின் மீது பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கவும்**

**அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.**

**நகர்மன்றத் தீர்மான எண்.2955**
**அரசுக்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண்.14

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 தாலுகா அலுவலகம் சந்திப்பு முதல் படப்பறை குளம் செல்லும் சாலை சிமெண்டு தளம் அமைத்தல் மற்றும் வடிகால் ஓடை பராமரிப்பு செய்தல் | 7.50 |
| 2 | வார்டு 1 படப்பறை குளம் முதல் ஜேக்கப் நகர் செல்லும் சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 9.80 |
| 3 | வார்டு 2 கலையன்குளம் சாலை மற்றும் வள்ளிக்கோட்டு குளம் அருகிலுள்ள நரியன்விளை சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 9.80 |
| 4 | வார்டு எண்.3 கழுவன்திட்டை ஆர்.சி.தெருவில் பேவர் பிளாக் சாலை மற்றும் தார் சாலை செப்பனிடும் பணி செய்தல் | 7.80 |
| 5 | வார்டு 4 பெருந்தெருவில் கோபி வீடு முதல் அம்மன்கோவில் ரோடு வரை தார் சாலை செப்பனிடும் பணி செய்தல் | 5.70 |
| 6 | வார்டு 9 விளவங்கோடு William house முதல் நகராட்சி எல்கை முடிவு வரை சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 7.90 |
| 7 | வார்டு 10 விளவங்கோடு சாலையிலிருந்து கிழங்குவிளை செல்லும் சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 4.90 |
| 8 | வார்டு 11–ல் YMCA சாலை முதல் துரும்பல் விளை சாலை வரை தார் சாலை புதுப்பித்தல் | 3.50 |
| 9 | வார்டு 12 சிங்கிளேயர் சர்ச் முதல் கண்ணக்கோடு கிருஷ்ணன்கோவில் வரை உள்ள தார் சாலை செப்பனிடுதல் | 8.50 |
| 10 | வார்டு 15 பாஸ்டர்ஸ்லேன் முதல் பந்நியணி வரை உள்ள சாலை சிமெண்டு தளம் மற்றும் தார் சாலை அமைத்தல் | 8.70 |
| 11 | வார்டு 18 சானல்ரோடு சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 9..90 |
| 12 | வார்டு எண்.21 சந்தை அருகில் Vinod Hospital செல்லும் சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 5.90 |

மேற்கண்ட பணிகளை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2956**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.15

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–ல் உண்டனாகுழி பெருங்குளம் கரையில் நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணற்றில் உள்ள Motor, Panel Board, HDPE Tank ஆகியவை பழுதடைந்து குடிநீர் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ளதால் மேற்படி Motor, Panel Board, HDPE Tank ஆகியவற்றை மாற்றி புதிதாக அமைப்பதற்கு ரூ.40,000/–ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு குடிநீர் நிதியில் பணி செய்ய மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2957**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.16

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட குழித்துறை கழுவன்திட்டை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து செல்லும் 4” AC வினியோகக் குழாயினை மாற்றி 4” PVC வினியோக குழாய் பொருத்துவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.50,000/–ற்கு தயார் செய்யப்பட்டு குடிநீர் நிதியில் பணி செய்ய மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2958**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.17

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட VLC Auditorium- த்தில் உள்ள கழிவறையில் Septic Tank–க்கு செல்லும் குழாயில் அடைப்பு ஏற்பட்டு கழிவறை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி அடைப்பு சரி செய்யவும், மேலும் மண்டபத்திற்கு வரும் குடிநீர் குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் தண்ணீர் குழாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்பு சரி செய்யவும் உத்தேச மதிப்பீடு ரூ.40,000/–க்கு தயார் செய்யப்பட்டு குடிநீர் நிதியில் பணிமேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2959**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.18

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சி வார்டு எண்.10 தேவிகுமாரி கல்லூரி செல்லும் சாலையில் சிமெண்டு தளம் அமைத்தல் மற்றும் புதிதாக வடிகால் ஓடை அமைக்கும் பணி செய்தல் | 5.70 |
| 2 | வார்டு 20 மார்த்தாண்டம் நந்தன்காடு சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 5.30 |
| 3 | வார்டு 15 தேவன்விளை சாலையில் பேவர் பிளாக் அமைத்தல் | 5.50 |

| | | |
|---|---|---|
| 4 | வார்டு 15 வடக்கு தெருவிலிருந்து பந்நியணி செல்லும் சாலை தார் தளம் அமைத்தல் | 1.70 |
| 5 | வார்டு 6–ல் இடக்குளம் சாலையின் அருகில் செல்லும் வடிகால் ஒடை அகலம் கூடுதலாக உள்ளதால் அகலம் குறைத்து புதிதாக வடிகால் ஒடை அமைத்து மூடுசிலாப் அமைக்கும் பணி செய்தல் | 6.80 |

மேற்படி பணிகளை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2960**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.19

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட VLC மைதானம் அருகில் தாமிரபரணி ஆறு பக்கம் வாம்பே திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட கழிப்பறையின் Closet, கதவுகள் உடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், மேற்படி கழிவறையின் கதவுகள், Closet மற்றும் தண்ணீர் குழாய்களை மாற்றி அமைக்கவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், வி.எல்.சி. மண்டபத்தில் கதவுகள் பழுதடைந்துள்ளதை சரி செய்வதற்கும் உத்தேச மதிப்பீடு ரூ.1,38,000/–ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2961,**
**அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/–
ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.